உ
சிவமயம்



# சரவணையூர்
# கெங்காதரம்பிள்ளை நல்லம்மா
# அவர்களின்
# இல்லச்சிறப்பு மலர்
## 29.06.2009

கலியுகம் 5111 ஆனி மாதம் 15ஆம் திகதி திங்கட்கிழமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

உ

சிவமயம்

சரவணையூர் கெங்காதரம்பிள்ளை
நல்லம்மா அவர்களது இல்லச்
சிறப்புமலர் கலியுகம் 5111 ஆனி மாதம்
15ஆம் திகதி (29.06.2009) திங்கட்கிழமை
வீட்டுக்கிருத்திய நிகழ்வில் வெளிப்படுத்தப்படும்
"**இல்லச் சிறப்புமலர்**" எங்கள் குலம் சிறக்கவும்
அமரரின் வாழ்வும் வளமும் உலகியலின்
தொடர்பால் எமது முன்னோர்களதும் எதிகால
வம்சத்தவரின் இணைப்பாகவும் சமர்ப்பணம்
செய்கின்றோம். எல்லாம் வல்ல
சிவபெருமானது பெரும்புகழ் கொண்டோர்
புகழ்பெறுக.

ஆக்கம்

சு. வே. கெங்காதரம்பிள்ளை குடும்பத்தினர்
"முருகபவனம்" ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவிலடி,
சரவணை.

இல. 37, வைமன் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



பிறப்பு
13.03.1926

இறப்பு
30.05.2009

# அமரர்
# கெங்காதரம்பிள்ளை நல்லம்மா

**திதிநிர்ணயம்**

கலியுகம் ஐயாயிரத்து நூற்றிபதினொன்று விரோதி
வருடம் வாக்கிய பஞ்சாங்க கணிப்பில் வைகாசி பதினைந்து
வெள்ளிநாள் வாரம் வளர்பிறை சஸ்டிதிதி பின்னிரவு
சூரிய அஸ்தமனம் நாளிகை ஐம்பத்தேழு நல்லம்மாநாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சரவணையூர்
# அமரர் கெங்காதரம்பிள்ளை நல்லம்மா இல்லச்சிறப்பு நினைவுகள்

இலங்காபுரிவாழ் இந்து சமயமரபுகள் கொண்டமைந்த வாழ்வு காலச் சிறப்புடையதாகும். ஊர்காவற்றுறை கோவிற்பற்று சரவணையிறை தீவகத்தின் தனிச்சிறப்பாகும். வேலணை-சரவணையின் தனித்துவம் அல்லைப்பிட்டி மண்கும்பான் வெள்ளைப்புற்றடி விநாயகர் தொடர்பால் வளம்பெற்ற தன்மை சிறப்புநிலையாகும்.

வலிகாம் புகழ் வண்ணார்பண்ணை சிவனருளால் குசவன் குள்மரபும்-சரவணையூர் தில்லைமேடை சிவனருளும் திருமுறைகளின் சிறப்பால் மீளவளம் பெற்றதன்மை தனித்துவமாகும். கெங்காதரம்பிள்ளையை தனது இல்லத்தலைவனாக பெற்ற நல்லம்மா பெற்ற சிறப்புகள் கால முதன்மையாகும். கருநாரி சுப்பிரமணியம் வள்ளிம்மையும் அவர்தம் சகோதரர்கள் முத்துக்குமாரு, நல்லதம்பி, தம்பு, நாகலிங்கம் புகழ்பெற்றனர். உ.ம.சு. வேலுப்பிள்ளையின் காலம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரும் அவர்தம் சீடர்கள் பணிகள் விரிவுற்ற நாள்களாகும்.

இவர் தம் ஆகமநெறி கொண்டமைந்த கோயில்களாக மயிலப்புலம் கட்வன் வான்ஜயனார் கோயில், பள்ளம்புலம் முரகமூர்த்தி கோயில் அமைந்தன. முருகப்பர் அம்மையடியார் மகள் சின்னத்தங்கம்-விசுவநாதர் பெற்றோர்களாக பெற்றவளே நல்லம்மா என்னும் நல்லாலாகும்.

தந்தைவழி சின்னவிதானை மரபுவழி சேதுகாவலர் முதன் மகன் விசவநாதர். இவர் உடன்பிறப்பு விசாலாட்சி. தாயை இழந்தபின்னர் வேலணை குத்துவையிரவர் கோயிலடி (தற்போதைய முருகன் கோயில் வங்கலாவடி) பெற்ற மனைவாழ்வில் உடன்பிறந்தோர் ஆறுமுகம், செல்லத்தம்பி, பெரியநாச்சி, பொன்னாச்சி, சின்னாச்சி, வள்ளியம்மை, முத்துப்பிள்ளை, தெய்வயானை வளமும் வாழ்வும் தேவமுதலிசீமால் நிலப்பரப்பின் பரவலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குலம் சிறக்க புளியடி ஆதிவைபிரவர் துணையும் ஸ்ரீகதிர்வேல் முருகன் துணையும் பாண்புடன் சைவசமய மரபுகள் பல்கிவகிபாகம் தீவகத்திலும் தேசியத்திலும் சர்வதேசத்திலும் சிறப்புறும் தன்மைகளுடன் வாழ்கின்ற வரலாறு தனித்துவமேயாகும்.

விசுவநாதர் இல்லத்தின் முதல் மனைவி பெற்ற மகள் சைவசித்தாந்தி சித்தவைத்தியர் சோமசுந்தரம் அவர்களின் முதல் மனையாளாகும். விசுவநாதர் தன் இல்லறத்தின் மனையாளை இழந்தநிலையில் முருகப்பர் மகள் சின்னத்தங்கம் முதன்மை பெற்று பெற்ற பிள்ளைகள் விசாலாட்சி, பிரசித்த சொத்தாரிசு சேதுகாவலர், மயில்வாகனம், நல்லம்மா என்போராகும்.

கெங்காதரம்பிள்ளை உடன்பிறந்த மைத்துனராகும். செல்லப்பா இளமையில் இறைபாதம் பெற்றார். மைத்துனிகளாக சீனிவாசகம் பராசக்தி பூநகரி செல்லப்பா-செல்லம்மா, கனகசபை-சின்னம்மா, சுப்பையா-இளையபிள்ளை இவர் வளத்தில் துணையாகின்றார்கள்.

நல்லம்மா உடன்பிறந்த அக்கா விசாலாட்சி-வினாசித்தம்பி (மண்கும்பான்) வியாபாரவளமும் (நாரம்பளை) விவசாய வளமும் வளமாகும். காலம் மீனாம்பாள், தனையசிங்கம் (பட்டயக்கணக்காளர்) வாழ்வில் அக்காவும் மகளும் சிவனடி சேர்ந்தனர். இதனால் தன்மகனாகவும் மருகராகவும் உடன்பிறந்தோர் தளையசிங்கம் கல்வியிலும் வாழ்விலும் வழிகாட்டி உயர்கல்வியும் வளமாக்கி இலண்டன் சென்றுவர வழிகண்டு மகிழ்ந்தார்கள். இவர்தம் மனையாளாக விமலாவை வீமன்காமத்தில் பெற்று பிள்ளைகள் என்மர் வாழ்விலும் அவர்தம் மனைவாழ்வும் பூட்டர்கள் வாழ்வும் தனித்துவம் பெற்றன.

நல்லம்மா உடன் பிறந்த அண்ணர் சேதுகாவலர்-மங்களம் பெற்ற மகள் கலாதேவி-சிவானந்தம் (ஆசிரியர்) வாழ்வின்வளம் கண்டு வாழ்த்தினர். மருமகள் கலாதேவி மறக்காமல் தொடர்பு கொள்வாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லம்மாவுடன் உடன்பிறந்த சின்ன அண்ணா மயில்வாகனம் உடன்வாழ்ந்து தங்கை வளம்கண்டு மகிழ்ந்தவாழ்வு தனித்துவமேயாகும். வீட்டின் அமைப்பிலும், ஊரவர் சிறப்பிலும் மரம் நடுகையிலும் கிராமம் சிறக்கவும் மருமக்கள் வாழ்வே தன் வாழ்வாக வாழ்ந்தார். இவரின் பிரிவு (1990 மார்கழி) தலைமகன் இ.வி. தளையசிங்கம் (1990 மாசி) பிரிவு இல்லத்தில் பெரும் பிரிவு. கணவனை (1981 ஆடி) பிரிவை மேலும் பாதித்தன. 1991 ஐப்பசி மாத தீவக இடம்பெயர்வாகும். வலிகாமம் வாழ்வில் கணவர்வழி உறவினர் தொடர்பால் இணைந்தனர். வலிகாமம் இடப்பெயர்வு 30.10.1995 வரை வாழ்வுற்ற காலம் ஓர் காலப்பதிவாகும். தென்மராட்சியில் மகனுடன் இணைந்தவர்கள் பலராகும்.

கெங்காதரம்பிள்ளை நல்லம்மா இல்லத்தில் பெற்றபிள்ளைகள் ஐவராகும். பராசக்தியம்மா, பாலகுமாரு, தனபாலன், உலகேஸ்வரி, கிருபாகரன் என்போர் வாழ்வும் வளம்பெற பெற்றமருகர் தம்பையா-முத்தம்மா (கரம்பொன்) பெயர் கொண்ட யோகநாதன் (துறைமுக அதிகாரசபை ஓய்வுநிலை) அவர்தம் வாழ்வில் பராசக்தியம்மா (கல்வியில் யா/இந்து மகளிர் கல்லூரி) வைத் 1973ஆம் ஆண்டில் திருமணம் செய்துகொண்டார்.

மகன் பாலகுமாரு தந்தையின் தொழில்வளத்துடன் பிற்காலம் யாழ்ப்பாணம் அன்னசத்திரம் சுப்பிரமணியம் விவேகவதியின் கனிஷ்ட மகள் அம்பிகை (சங்கீத ஆசிரியை) மணம் கொண்டு வளம் பெற்றார்.

மகன் தனபாலன் (ஆசிரியர்) தந்தையின் தொழில் வளத்துடன் கல்வியில் பெற்ற சிறப்பால் ஆசிரியர் சேவையில் சிலாபத்தில் இணைந்தது இன்புற்றார். 1977ல் நாட்டின் நிலைமாற்றம் தொழில் சீர்குலைவால் யாழ் மாவட்டத்தில் பணிபுரியும் காலம் சாவகச்சேரி காரைநகர் சண்முகம்-பாக்கியம் மகள் நாகேஷ்வரியை திருமணம் கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகள் உலகேஸ்வரியை தந்தைவழி தம்பியும் மைத்துனியும் ஆகிய இராசையா-செல்லம்மா மகன் இரகுநாதனைப் பெற்று மகிழ்வுற்றார். இளைய மகன் கிருபாகரன் பிரான்ஸ் சென்று பெற்ற சிறப்பால் மருகியாக மட்டுவில் வேரற்கேணி கந்தசாமி கோயிலடி சுப்பிமணியம்-செல்வரத்தினம் மகள் சுபாசினி (ஆசிரியை) பெற்று மகிழ்ந்தனர். மகன் கிருபாவின் அகாலமரணம் (19-11-2008)ல் இடம்பெறவே தளர்வுற்றும் தளாவுறாது வாழ்ந்த வளம் சிறப்பாகும். என்றென்றும் மக்கள் மனங்களின் தடுமாறும் நிலையுணர்து இறைவன்தாழ் சென்றார் நல்லம்மா நலம் பெறவே!

கலியுகம் 5111 விரோதி வருடம் தொடர்புகள் குறைந்து துயரங்கள் மலிந்தபோது மகன் நினைவும், கணவரின் நினைவும் காலப்பதிவும் நேரம் நிர்ணயிக்க நிலையுணர்ந்து நிறைவுபெற்ற நாள் வெள்ளிநாள் வாரம் பின்னிரவு வைகாசி மாதம் 15ம் நாள் சூரிய அஸ்தமன நேரம் நாளிகை ஐம்பத்தேழு சஷ்டிதிதி வளர்பிறை என்றுணர்தல் சிறப்பாகும்.

கி.பி. 2009 வைகாசி மாதம் முற்பகல் 30ஆம் திகதி 4.45 நிமிடம் எனவும் கொள்வோம். இனிதான இறையுணர்வின் பதிவு நேரமாகும்.

## தேற்றம்

உலகெலாம் உணரும் உண்மையுணர்வுகள்
உண்மையெனில் உயிர்பெற்று உடல்மாறும்
உணர்வுகள் நிலையில்லையென நல்லம்மா
உண்மையில் உயர்வுற்றாள் எனக்கொள்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# சைவத்திருமுறைகள்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து

## தேவாரம்

உற்றுமை சேர்வது மெய்யினையே
உணர்வது நின்னருள் மெய்யினையே
கற்றவர் காய்வது காமனையே
கனல்விழி காய்வது காமனையே
அற்றம் மறைப்பதும் உன்பணியே
அமரர்கள் செய்வதும் உன்பணியே
பெற்றும் உகந்தது கந்தனையே
பிரமபு ரத்தை உகந்தனையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

நரியைக் குதிரைப் பரியாக்கி
ஞால மெல்லாம் நிகழ்வித்துப்
பெரிய தென்னன் மதுரையெல்லாம்
பிச்சி தேற்றும் பெருந்துறையாய்
அரிய பொருளே அவிநாசி
அப்பா பாண்டி வெள்ளமே
தெரிய அரிய பரஞ்சோதீ
செய்வ தொன்றும் அறியேனே.

## திருவிசைப்பா

கலைகள்தம் பொருளும் அறிவுமாய் என்னைக்
கற்பினிற் பெற்றெடுத்(து) எனக்கே
முலைகள்தந்(து) அருளும் தாயினும் நல்ல
முக்கணான் உறைவிடம் போலும்
மலைகுடைந் தனைய நெடுநிலை மாட
மருங்கெலாம் மறையவர் முறையோத்(து)
அலைகடல் முழங்கும் அந்தண்நீர்க் களந்தை
அணிதிகழ் ஆதித்தேச் சரமே.

## திருப்பல்லாண்டு

எந்தை எந்தாய் சுற்றம் முற்றும்
எமக்கு அமுதாம் எம்பிரான் என்றென்று
சிந்தை செய்யும் சிவன்சீர்
அடியார் அடிநாய் செப்புரை
அந்தமில் ஆனந்தச் சேந்தன்
எனைப்புகுந் தாண்டு கொண்ட டாருயிர்மேல்
பந்தம் பிரியப் பரிந்தவனே
என்று பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

உலகெலாமுணர்ந்து ஓதுதற்கரியவன்
நிலவுலாவிய நீர்மலிவேணியன்
அலகிற் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோணமலை திருப்புகழ்

விலைக்கு மேனியி லணிக்கோவை மேகலை
தரித்த வாடையு மணிப்பூணு மாகவெ
மினுக்கு மாதர்க ளிடக்காம மூழ்கியெ மயலூறி
மிகுந்த காமிய னெனப்பாரு ளோரெதிர்
நகைக்க வேயுட லெடுத்தேவி யாகுல
வெறுப்ப தாகியெ யுழைத்தேவி டாய்படு கொடியேனைக்
கலக்க மாகவெ மலக்கூடி லேமிகு
பிணக்கு ளாகிய தவிக்காமலேயுனை
கவிக்கு ளாய்சொலி கடைத்தேற வேசெயு மொருவாழ்வே
கதிக்கு நாதனி யுனைத்தேடி யேபுக
ழுரைக்கு நாயெனை யருட்பார்வை யாகவெ
கழற்கு யாகவெ சிறப்பான தாயருள் தரவேணும்
மலைக்கு நாயக சிவக்காமி நாயகர்
திருக்கு மாரனெ முகத்தாறு தேசிக
வடிப்ப மாதொரு குறப்பாவை யாழ்மகிழ் தருவேளே
வசிட்டர் காசிபர் தவத்தான யோகியர்
அகத்தய மாமுனி யிடைக்காடர் கீரனும்
வகுத்த பாவினில் பொருட்கோல மாய்வரு முருகோனே
நிலைக்கு நான்மறை மகத்தான பூசுரர்
திருக்கொ ணமலை தலத்தொரு கோபுர
நிலைக்குள் வாயினில் கிளப்பாடு பூதியில் வருவோனே
நிகழ்த்து மேழ்பவ கடற்சூறை யாகவெ
யெடுத்த வேல்கொடு பொடித்தூள தாஎறி
நினைத்த காரிய மநுக்கூல மேபுரி பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமுதமொழிகள்

## அன்னை

1 தாயின் இதயந்தான் குழந்தையின் பள்ளிக்கூடம்.
- ஏச். டபிள்யூ. பிச்சர்

2. இந்தப் பூமியில் மனைவியைவிட உயர்ந்தபொருள் ஒன்று உண்டு; அது அன்னை. - எல். ஷாபெர்

3. குழந்தை முதலில் தாயின் உடலில் தான் உணவு அருந்துகிறது. ஆனால் அது தாயின் உள்ளத்தால் தான் என்றும் உயிா வாழ்கிறது.
- எச் டபிள்யூ. பீச்சர்

4. குழந்தையின் எதிர்காலம் எப்போதும் அன்னையின் செய்கையில் தான் அடங்கியிருக்கிறது. - பெபோலியன்

5. ஒரு பவுண்டு உபதேசத்தை விட ஒரு அவுன்சு தாய்மை மேலானது.
- யாரோ

6. கடவுள் எங்கும் பிரசன்னமாய் இருக்கமுடியாது. அதனால் அவர் தாய்மார்களைச் சிருஷ்டித்தார். - யாரோ

7. சில பெற்றோர்களின் அதிகமான அன்புதான் பல குழந்தைகளின் ஒளி பொருந்திய எதிாகாலத்தையே இருளடையச் செய்துவிடுகிறது.
- கார்லீ

## கல்வி

1. கேடில் விழுச் செல்வம் கல்வி. - வள்ளுவன்

2. கல்வியே நிறைந்த இன்பம், சிறந்த அணிகலம், செறிந்த ஆற்றல்.
- பிரான்சிஸ்பெகன்

3. ஆண்மையளிப்பதே கல்வியின் இலட்சியமாய் இருக்கவேண்டும். எல்லாப் பயிற்சிகளின் நோக்கமும் அதுவே. மனிதனுடைய மனோ சக்தியைத் தன்வயப்படுத்தி, பயன்படத்தக்க துறையிற் செலுத்துவதே கல்வி எனப்படும். - சுவாமி விவேகானந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. கற்றுக்கொள், ஆனால் கற்றாரிடமிருந்துதான் கற்கவேண்டும்.

- காற்றோ

5. கல்வி என்பது மனங்கோணி, இடது கரத்தால் பாமர மக்களுக்குக் கொடுக்கப்படும் சலுகை அல்ல. கல்வி எல்லோரினதும் பிறப்புரிமை.

- ப. சந்திரசேகரம்

6. நான் எப்போதும் கற்கத் தயார். ஆனால், எவனாவது எனக்குப் போதிக்க வந்தால், அதைச் சகிக்கமாட்டேன்.

- வின்ஸ்டன் சர்ச்சில்

7. கல்வி கரையில; கற்பவர் நாட்சில - நாலடியார்

8. அறிவு வளர்ச்சிக்கு ஒரே ஒரு முறைதான் உண்டு. அதுதான் மனத்தை ஒருமுகப்படுத்தல் என்பது. கல்வியின் அடிப்படையான இலட்சியமே மனத்தை ஒருமுகப்படுத்துவததான். சாதாரண மனிதனிலிருந்து சகல சித்திகளையும் பெற்ற யோகிவரை, எல்லோரும் தங்கள் அறிவு வளர்ச்சிக்கு அம்முறையைத்தான் பின்பற்றியாக வேண்டும். - சுவாமி விவேகானந்தர்

9. இளைஞர்கட்குக் கல்வி போதிப்பதற்குரிய ஒரு பாடசாலையை ஒருவர் ஏற்படுத்துவாரேயானால் அவர் உண்மையில் சிறைச்சாலையை மூடியவராவார். - ராஷ் ஹறி கோன்

10. உயர்ந்த கல்விப் பாடப் புத்தகத்திற்காகக் காத்திருந்தால், "தழைக்குப் பின் நான் தோன்றுவேனென்று" மரம் காத்திருக்கும் "கரைக்குப் பின் நான் தோன்றுவேனென்று நதிகாத்திருக்கும்."

- தாக்ஷர்

11. அவ்வம் மொழியினர் அவ்வம் மொழிவழிக் கல்வி பெறுவதே இயற்கை. - திரு. வி. க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. பள்ளியிலே நாம் கற்றதையெல்லாம் அடியோடு மறந்துபோன பிறகு எஞ்சுவதுதான் கல்வி. - லோர்ட் ஹாலிக்பாக்ஸ்

13. அணுகுண்டுகளால், அநியாய யுத்தங்களால் நாகரிகம் நசிந்துவிடும் என நான் நம்பவில்லை. உலகத்து மக்களில் பெரும்பான்மை அழிந்து விடலாம். ஆயினும் தேவையான அளவு சிந்தனையாளரும், போதிய புத்தகங்களும் கிடைக்குமேயானால் நாகரிகக் கோட்டையைச் சில நாட்களில் கட்டி எழுப்பிவிடலாம்.
- அல்பேர்ட் ஈன்ஸ்ரீன்

14. கல்வி கருத்துக்கு இன்பந் தருகின்றது; அணிகலனாக மிளிர்கின்றது. ஆற்றலையும் வளர்க்கின்றது. - பிரான்சிஸ் பேகன்

15. பசித்த ஒருவனுக்கு இன்று நீ சோறுபோடலாம்; ஆனால் நாளைக்கும் அவனுக்குப் பசிக்கும் ஒரு தொழிலை அவனுக்கு நீ கற்றுக்கொடுத்தாலே, ஆயுள் உள்ள மட்டும் அவன் ஜீவனத்துக்குச் சம்பாதித்துக்கொள்வான். - இராமதீர்த்தர்

16. பொறுப்புணர்ச்சி உள்ளவர்களையும், கடமையை ஏற்கக் கூடியவர் களையும், சரி எது? பிழை எது? என்று கிரகித்து முடிவுக்குவர ஆற்றல் உள்ளவர்களையும் உண்டாக்குவது கல்வியின் நோக்கங்ளுள் ஒன்று. - ப. சந்திரசேகரம்

17. கற்பது குறைவானாலும், கசடறக் கற்க வேண்டும். - யாரோ

18. சிலர் சிந்திக்கப் படிக்கிறார்கள. இவர்கள் அபூர்வம்; எழுதுவதற்காகச் சிலர் படிக்கிறார்கள். இவர்கள் கொஞ்சம் அதிகம்; வம்பளக்கச் சிலர் படிக்கிறார்கள். இவாகள் தான் அநேகம். - யாரோ

19. தாய் மொழியிலே எந்தக் கல்வியும் எவர்க்கும் தரலாம்.
- கோமசுந்தர பாரதியார்

20. ஒருவர் தாம் கற்கும் பாடங்களைத் தாய்மொழியிலேயே கற்கவேண்டும். - கா. பொ. இரத்தினம்

நன்றி (அமுதமொழிகள் ஆயிரம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புராணபடனம்

புராணங்களை நியமமாக விதிப்படி படித்தலும், அவைகளுக்குப் பொருள் சொல்லலும், கேட்டலும் சிறந்த புண்ணியங்களாகும்.

புராணம் வாசித்துப் பொருள் சொல்லற்குரிய இடங்களாவன. திருக்கோயில், திருமடம், புண்ணிய தீர்த்தக்கரை, சமயாசாரமுடைய வருடைய கிருகம் முதலிய சுத்தஸ்தானங்களாகும். மற்றையிடங்களில் புராணம் படிக்கலாகாது.

புராணம் வாசித்துப் பொருள் சொல்லற்கு யோக்கியராவார். நான்கு வருணத்துள்ளும் இலக்கணவிலக்கியங்களிலே வல்லவராய், நீதி நூல்களையும் சமயநூல்களையும் கற்றறிந்தவராய், தமிழ்வேதத்தை அத்தியயனம் பண்ணினவராய் நல்லொழுக்கத்திற் சிறந்தவராய் உள்ளவர். நல்லொழுக்கம் இல்லாதவரிடத்தே புராணங் கேட்டலாகாது.

ஸ்நானஞ் செய்து தோய்த்துலர்ந்த வஸ்திரந்தரித்து அனுட்டானம் முடித்துக்கொண்டே புராணம் படித்தல் பொருள் சொல்லல் கேட்டல் என்னும் இவைகளைச் செய்தல் வேண்டும். ஸ்நான முதலிய நியமங்கள் இல்லாமல் இவைகளைச் செய்தலாகாது.

புராணத் திருமுறையைப் பீடத்திலன்றித் தரையிலேனும், ஆசனத்திலேனும், படுக்கையிலேனும், மடியிலேனும் வைக்கலாகாது; திருமுறைக்கயிறு கீழே விழலாகாது. முறையென்பது புத்தகம்.

புராணத்தைச் சுபதினத்திலே தொடங்கிச் சுபதினத்திலே முடித்தல் வேண்டும். தொடங்குந்தினத்திலும் முடிக்குந்தினத்திலும் புராண மண்டபத்தைப் பட்டுமேற்கட்டி, பூமாலை, வாழை, கரும்பு முதலியவை களினால் அலங்கரித்தல் வேண்டும்.

நாடோறும் புராண மண்டபத்தைக் கோமயத்தினாலே மெழுகுவித்து, இடம்பண்ணி, அதன் மீது பீடத்தை வைத்து, அதன் மேலே பட்டுப் பரிவட்டம் விரித்து, அதன் மேலே புராணத் திருமுறையை வைத்து, சந்தனம், புஷ்பம், தூப தீபம் முதலியவற்றினாலே விதிப்படி பூசைசெய்து, நமஸ்கரித்து, இருந்துகொண்டு, ஒருவர் வாசிக்க ஒருவர் பொருள் சொல்லல் வேண்டும். குணத்துக்கும் காலத்துக்கும் ஏற்ப வாசிக்கப்படும். இராகத்திற்றானே பொருள் சொல்ல வேண்டும். வாசிப்பவர் திருமுறையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகத்தை இரண்டு கையினாலும் பிடித்துக்கொண்டே வாசித்தல் வேண்டும். பொருள் சொல்பவர், இலக்கண வழுவில்லாதபடிக்கும், கேட்பவர்கள் எல்லோருக்கம் எளிதில் விளங்கும்படிக்கும் சொல்ல வேண்டும். படிக்கத் தொடங்கும்போதும், முடிக்கும் போதும் காப்புச் சொல்லல் வேண்டும். அப்பொழுது எல்லோரும் அஞ்சலி செய்துகொண்டிருத்தல் வேண்டும்.

புராணங்கேட்பவர் புராணத்திருமுறையை நமஸ்கரித்து, புராணம் படித்துப் பொருள் சொல்லுவோருக்கு ஆசனங்கொடுத்து நமஸ்காரஞ் செய்து, தம்முடைய சுற்றாத்தாரோடும் நண்பரோடும் இருந்துகொண்டு, சிரத்தையுடன் கேட்டல் வேண்டும்.

புராணம் படிக்குஞ் சபையிலே உயர்ந்த ஆசனத்திருத்தல், காலை நீட்டிக்கொண்டிருத்தல், சயனித்தல், நித்திரைசெய்தல், சிரித்தல், பிறவார்த்தைகளைப் பேசுதல், புராணசரித்திரத்தைப் பொய்யென்றல், வெற்றிலைபாக்குண்ணுதல், தலையில் வேட்டி கட்டிக்கொள்ளுதல், உடம்பு போர்த்துக்கொள்ளுதல், சட்டையிட்டுக்கொள்ளுதல், இடையில் எழுந்து பிறிது கருமத்திலே செல்லுதல், புராணம் வாசித்துப் பொருள் சொல்வோரை நன்கு மதியாது அவமதிசெய்தல் முதலிய பாவங்களைச் செய்தோர் நரகத்திலே நெடுங்காலந் தண்டிக்கப்பட்டு, பின்பு இழிந்த பிறப்பை அடைந்து வருந்துவார்கள்.

புராணங்கேட்பவர் ஆதி தொடங்கி ஈறு வரையும் தவறாமல் நியமத்தோடு கேட்டல் வேண்டும். புராணமுற்றுப்பெற்ற தினத்திலே புராணத்திருமுறைக்கு விசேஷ பூசை செய்வித்து, புராணம் வாசித்த வருக்கும், பொருள் சொன்னவருக்கும், கடவுளுடைய அடியார்களுக்கும், குருடர் முடவர் முதலானவர்களுக்கும் சுற்றத்தார்களுக்கும் அன்னங் கொடுத்து, புராணம் வாசித்தவர்களுக்கும் பொருள் சொன்னவருக்கும் தம்மால் இயன்ற பொருள்கள் வைத்து நமஸ்காரம் பண்ணல் வேண்டும்.


எல்லோருங்கேட்டு உய்யும்பொருட்டுத் திருக்கோயில்களிலே யோக்கியர்களைக்கொண்டு புராணங்களை வாசித்துப் பொருள் சொல்லுவித்தல் மிக மேலாகிய புண்ணியம்.


நன்றி


(ஆறுமுகநாவலர் பாலபாடம்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

உலகின் இயல்பு நிலையில் எமது இல்லச் சிறப்புமலர் வெளியீடு 29.06.2009ல் இடம் பெறுவதற்கும், எமது அன்புத் தெய்வமாகும் கெங்காதரம்பிள்ளை நல்லம்மாவின் இறுதிக்கால உறவில் கலந்து கொண்டர்களுக்கும், மனிதப் பண்பாட்டு மரபுகள் பேணும் கோயில் குருமார் மரபினர்களாகிய சிவஸ்ரீ நாகலிங்கஐயர், சிவஸ்ரீ செல்லையாக் குருக்கள் கணபதிக்குருக்கள் மரபினர்களுக்கும், தீட்சாகுருமரபினராகிய சிவஸ்ரீ கரணவாய் கையிலாய நாதகுருமரபினர் மற்றும் வைத்திய சேவையாளர், நேரிலும் தந்திகள், தொலைநகல் தொடர்புகள் மூலமும் தொடர்புகொண்டவர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நன்றி

இல. 37, வைமன் வீதி,
யாழ்ப்பாணம்.

"முருகபவனம்"
ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவிலடி,
சரவணை.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சவிருட்சம்

கெங்காதரம்பிள்ளை + நல்லம்மா

- பராசக்தியம்மா + யோகநாதன்
  - கௌசலா + றமேஸ்
    - தாருண்யா
  - கேமா
  - திணேஷ்காந்
  - சுகண்யா
- பாலகுமாரு + அம்பிகை
  - சந்திரன்
  - சங்கீதா + பாலமுரளி
    - அபினா
    - அர்சன்
- தனபாலன் + நாகேஸ்வரி
  - திருநாவலன் +gpurhe;jp
  - பாரதிதாசன்
  - சிவதர்ஷிளி + கபிலன்
    - அஷ்வினி
    - கருணி
  - சிவநந்தினி + தினேஷ்குமார்
  - சிவசாந்தினி
- உலகேஸ்வரி + இரகுநாதன்
  - றஜீபன்
  - யானு
  - மயூரன்
- கிருபாகரன் + சுபாசினி
  - மதுரா
  - மிதுலா
  - மேகலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய், எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்? அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ, அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ, அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ, அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்.

"இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்"

- பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்

K.V.L. Printers: 146-2/1, Galle Road, Colombo-06. Tel: 0716 068427

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org